# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 145/2019

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | PW - 3 (LW -10) | நாள் | 02.09.2024 |
| பெயர் | லெட்சுமணன் | ஜாதி | |
| தந்தை பெயர் | விஸ்வநாதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | இளையமதுக்கூடம் | வயது | |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இளையமதுக்கூடத்தில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் பக்கத்து ஊரே சேர்ந்தவர்கள். சாட்சி ராமகிருஷ்ணனை தெரியும். அவர் எனது உடன் பிறந்த அண்ணன். என்னிடம் காட்டப்படும் வினோத் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 2** ஆகும். இரண்டாவது சாட்சி கையொப்பம் என் அண்ணன் உடையது. அந்த கையெழுத்தை சுமார் 9 வருடங்களுக்கு முன்பு மதியம் 03.00 மணியளவில் போட்டேன். எங்கு வைத்து போட்டேன் என்று ஞாபகம் இல்லை. ஸ்டேஷனில் வைத்து போட்டேன் என்று நினைக்கிறேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 3** ஆகும். இரண்டாவது சாட்சி கையொப்பம் என் அண்ணன் உடையது. அந்த கையெழுத்தை சுமார் 9 வருடங்களுக்கு முன்பு மதியம் 03.00 மணியளவில் போட்டேன். எங்கு வைத்து போட்டேன் என்று ஞாபகம் இல்லை. ஸ்டேஷனில் வைத்து போட்டேன் என்று நினைக்கிறேன். போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

எங்கள் ஊரில் செல்லியம்மன் கோவில் உள்ளது என்றாலும், அதன் பக்கத்தில் மாந்தோப்பு உள்ளது என்றாலும் சரி. அதன் பக்கத்தில் வயல் உள்ளது என்றாலும் நானும் என் அண்ணன் ராமகிருஷ்ணன் என்பவபரும் 16.07.2015 அன்று மதியம் 01.30 மணிக்கு பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரி. அப்போது மாந்தோப்பை திருவெண்காடு போலிசார் சுற்றி வளைத்தார்கள் என்றால் சரி. ஆஜர் 3 வது எதிரி வினோத் (எ) வினோத்ராஜ் அன்றைய தினம் மாந்தோப்பில் இருந்து வினோத் (எ) வினோத்ராஜ், அப்பு (எ) ஜெய்சூர்யா, கதிரவன் மற்றும் தங்கமணி ஆகியோரை போலிசார் கைது செய்தார்கள் என்றால் சரி. ஆஜர் எதிரிகளில் 3 வது எதிரி வினோத் (எ) வினோத்ராஜ், 5 வது எதிரி அப்பு, 7 வது எதிரி கதிரவன் என்று சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டுகிறார். அப்படி கைது செய்தபிறகு வினோத் (எ) வினோத்ராஜ் திருவெண்காடு Inspector ரிடம் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரி. அப்போது வினோத் ராஜ் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்களை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக சொன்னார் என்றால் சரி. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் முன்பாக வினோத் கையெழுத்து போட்டார் என்றாலும் நானும் எனது அண்ணனும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் சரி. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 16.07.2015 அன்று அரிவாள், கோடாலி, இரும்பு கம்பி ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் ஞாபகம் இல்லை. 9 வருடங்கள் ஆகிவிட்டதால் மறந்துவிட்டேன் என்றால் சரி. அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது அண்ணனும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் சரி. எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரி. அதனால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கையெழுத்தை திருவெண்காடு காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரி. எதற்காக போட்டேன் என்று ஞாபகம் இல்லை என்றால்

சரி. அதில் எதாவது எழுதி இருந்ததா என்றால் இல்லை வெற்று பேப்பரில்தான் கையெழுத்து போட்டேன். கைப்பற்றிய பொருட்களை என்னிடம் காட்டவில்லை என்றால் சரி. ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து ஊர் காரர்கள் என்பதால் எனக்கு தெரியும் என்றால் சரி. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி. போலிசார் சாட்சியம் சொல்ல கூப்பிட்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரி.